# 27-11-2024 செய்தி

## இந்தியாவில் குழந்தைத் திருமணம்

- இந்தியாவில் ஒரு நிமிடத்தில் மூன்று குழந்தைத் திருமணங்கள் நடப்பதாகச் சமீபத்திய ஆய்வு கூறுகிறது.
- அதேநேரத்தில், குழந்தைத் திருமணம் தொடர்பாக ஒரு நாளில் 3 வழக்குகள் மட்டுமே பதிவுசெய்யப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
- 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, தேசியக் குற்றவியல் ஆவணக் காப்பகப் பதிவுகள், தேசியக் குடும்ப நல ஆய்வு ஆகியவற்றின் தரவுகளின் அடிப்படையில் இந்த ஆய்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது.
- உலக நாடுகளில் குழந்தைத் திருமணங்கள் அதிகம் நடைபெறும் நாடாக இந்தியா உள்ளது. உலகளவில் நடைபெறும் குழந்தைத் திருமணங்களில் 45% தெற்காசியாவில் நடைபெறுகின்றன. இதில் 34% இந்தியாவில் நடப்பதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

**இந்தியா-தமிழ்நாடு**

- இந்தியா சட்டங்களின்படி, பெண்களின் திருமண வயது 18, ஆண்களின் திருமண வயது 21 என வரையறுக்கப்பட்டுள்ளது.
- இதற்குக் குறைவான வயதுடையோர் இடையே நடைபெறும் திருமணங்கள் குழந்தைத் திருமணங்கள் என அழைக்கப்படுகின்றன.
- இந்தியாவில் 20-24 வயதுக்கு உள்பட்ட பெண்களில் 18 வயதுக்கு முன் திருமணம் செய்துவைக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதே குழந்தைத் திருமணத்தைக் கணக்கிடுவதற்கான பொதுவான அளவுகோல்.
- அதன்படி, இந்தியாவில் 20-24 வயதுப்பிரிவைச் சேர்ந்த பெண்களில் குழந்தைத் திருமணம் செய்து வைக்கப்பட்டவர்கள் மேற்கு வங்கம் (42%), பிஹார் (41%), திரிபுரா(40%), ஜார்க்கண்ட் (32%), அசாம் (31%) ஆகிய மாநிலங்களில் அதிகமாக உள்ளதாக தேசியக் குடும்ப சுகாதார ஆய்வு - 5இல் (2019-2021) தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நாகாலாந்து (6%), இமாச்சலப் பிரதேசம் (5%), ஜம்மு -காஷ்மீர் (5%), லடாக் (3%), லட்சத்தீவுகள் (1%) போன்ற மாநில/மத்திய ஆட்சிப் பகுதிகளில் இதே வயதுப் பிரிவைச் சேர்ந்த பெண்களில் குழந்தைத் திருமணம் செய்துவைக்கப்பட்டவர்கள் குறைவாக உள்ளனர்.
- தமிழ்நாட்டில் ஒரு நாளில் சராசரியாக 10 குழந்தைத் திருமணங்கள் நடப்பதாகத் தமிழ்நாடு அரசின் சமூகநலன்-மகளிர் உரிமைத் துறை வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

**வறுமையும் வேலையின்மையும்**

- குழந்தைத் திருமணங்களுக்கு முதன்மைக் காரணம் குடும்பத்தில் நிலவும் வறுமை, குடும்பத்தின் பொருளாதாரச் சூழல் வலிமையாக இல்லாதபோது, பெண் குழந்தைகளைச் சிறு வயதிலே திருமணம் செய்துவைக்கும் முடிவைப் பெற்றோர் எடுக்கின்றனர்.
- குழந்தைகளுக்குக் கல்வி சரியாகக் கிடைக்காதபோதும், பொருளாதாரச் சூழல் உள்ளிட்ட காரணங்களால் கல்வி கற்பதில் தடை ஏற்படும் போதும் குழந்தைத் திருமணங்கள் அதிகரிக்கின்றன.
- அடுத்துவேலையின்மை, உள்ளூரில் வேலைவாய்ப்பு இல்லாத சூழலில் பிழைப்புத் தேடிப் பிற மாவட்டங்களுக்குச் செல்லும் பெற்றோர் பாதுகாப்பு குறித்த அச்சத்தின் காரணமாக, பெண் குழந்தைகளுக்குப் பதின்பருவம் தொடங்கிய உடனேயே திருமணம் செய்துவைக்கும் போக்கும் தொடர்கிறது.
- குழந்தைத் திருமணம் நகரங்களைக் காட்டிலும் கிராமங்களில் கூடுதலாகப் பதிவாகிறது, கிராமங்களில் 20-24 வயதுப் பெண்களில் 27% பேர் குழந்தைத் திருமணம் செய்து வைக்கப்பட்டவர்கள், நகரங்களில் 15%.

**கொடிய விளைவுகள்**

- குழந்தைத் திருமணங்களால் பெண் குழந்தைகளின் கல்வி பறிக்கப்படுவதால், தமது அனைத்துத் தேவைகளுக்கும் குடும்பத்தினரையே அவர்கள் சார்ந்திருக்கும் சூழல் ஏற்படுகிறது.

- இந்தியாவில் கட்டாயப்படுத்தப்பட்டுத் திருமணம் செய்துவைக்கப்படும் சிறுமிகளில் 60%க்கும் அதிகமானோர் ரத்தசோகையால் பாதிக்கப்படுகின்றனர்.
- இப்பாதிப்பால் இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் பிறக்கின்றன. பிரசவத்தின்போது குழந்தை இறப்பும் நிகழ்கிறது.

**குழந்தைத் திருமணத்தைத் தடுக்க.....**

- குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், குழந்தைத் திருமணங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகத் தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ‘குழந்தைத் திருமணத் தடைச்சட்டம்’ (2006) இயற்றப்பட்டுள்ளது.
- இந்தச் சட்டத்தின்படி, குழந்தைத் திருமணம் நடத்தி வைப்பவர், திட்டமிட்டவர், திருமணச் சடங்கை நிகழ்த்துபவர் ஆகியோருக்கு அதிகபட்சமாக 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை அல்லது ரூ.1 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் வழங்கப்படுகிறது.
- ஆனால், திருமணத்தை நடத்திவைத்ததாகக் குற்றம்சாட்டப்பட்டவர், தான் செய்துவைத்தது குழந்தைத் திருமணம் என்பது தனக்குத் தெரியாது என்பதை நிரூபித்தால் அவர் தண்டனையிலிருந்து தப்பிவிட முடியும்.
- குழந்தைத் திருமணங்களைத் தடுக்கப் பெண்களின் திருமண வயதை 18இலிருந்து 21 ஆக உயர்த்த வழிவகை செய்யும் சட்டம் இமாச்சலப் பிரதேசச் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.
- குழந்தைத் திருமணம் தொடர்பாகப் புகார் அளிக்க 1098 என்கிற எண்ணும் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**முன்னுதாரணமான அசாம்**

- குழந்தைத் திருமணத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இந்தியாவில் பிற மாநிலங்களுக்கு அசாம் முன்னுதாரணமாகியுள்ளது.
- 2021-2022. 2023- 2024 காலக்கட்டங்களில் அசாமில் 20 மாவட்டங்களில் உள்ள 1,132 கிராமங்களில் குழந்தைத் திருமணம் கிட்டத்தட்ட 81% குறைந்துள்ளதாகத் தேசியக் குடும்ப சுகாதார ஆய்வு கூறுகிறது.

**யுனிசெஃப் கணிப்பு**

- குழந்தைத் திருமணங்கள் அனைத்தும் கட்டாயத் திருமணங்ளே எனச் சுட்டிக்காட்டும் உச்சநீதிமன்றம், அத்திருமணங்கள் நிகழாமல் தடுப்பது மிகவும் முக்கியம் என வலியுறுத்தியிருக்கிறது.
- இந்தியாவில் 2006இல் 20-24 வயதுடைய பெண்களில் 47% பெண்கள் குழந்தைத் திருமணம் செய்துவைக்கப்பட்டவர்களாக இருந்தனர்.
- 2019-21 இல் இது 23% ஆகக் குறைந்துள்ளது. இருப்பினும் ஆந்திரப்பிரதேசம், அசாம், பிஹார், ஜார்க்கண்ட், ராஜஸ்தான், தெலுங்கானா, திரிபுரா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் குழந்தைத் திருமணங்களின் எண்ணிக்கை தேசியச் சராசரியைவிட அதிகமாகவே உள்ளது.
- 2030 க்குள் தெற்காசியாவில் குழந்தைத் திருமணங்களின் எண்ணிக்கை குறைந்தாலும் அவற்றை முழுமையாக அகற்ற 55 ஆண்டுகள் தேவைப்படலாம் என ஐ.நா. குழந்தை நல அமைப்பான யுனிசெஃப் கணித்துள்ளது.

## அதிகரிக்கும் ஹிமாலய பனிக்கட்டி ஏரிகள்

- அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக 13 ஆண்டுகளில் பனிக்கட்டி ஏரிகளின் எண்ணிக்கை 10.81 சதவீதம் உயர்ந்துள்ளதாக செய்திகள் வெளியாகின.
- இந்தியாவில் பனிக்கட்டி ஏரிகளின் மேற்பரப்பளவு 33.7 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை பெரும்பாலும் லடாக், ஹிமாச்சல பிரதேசம், உத்தரகண்ட், சிக்கிம், அருணாசல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ளன.
- பனிக்கட்டி ஏரிகளின் பரப்பளவு அதிகரிப்பதால் பெரும் வெள்ளம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பும் உருவாகியுள்ளது. இதனால் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள உள்கட்டமைப்புகள் மற்றும் பல்லுயிர் தன்மைக்கு அதிக பாதிப்புகள் ஏற்படவுள்ளன.
- பனிக்கட்டி ஏரிகள் அதிகரித்திருப்பது பல்லுயிர் தன்மை சட்டம், நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் ஆகியவை மீறப்பட்டிருப்பதை உணர்த்துகிறது.

SURESH'